செய்தி வெளியீடு எண்: 300 நாள்:10.6.09

<u>பத்திரிகை செய்தி குறிப்பு</u>

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ள மீனவர் மற்றும் மீன்பிடி சார்ந்த தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு நல வாரியத்தின் மூலமாக பலவகை நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை மீன்வள நல வாரியம் 850 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் ரூ. 29,28,750/– வழங்கியுள்ளது.

10.06.2009 அன்று தலைமைச் செயலகத்தில் மீனவர் நல வாரியத் தலைவரும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கே.பி.பி. சாமி அவர்களால் கீழ்க்கண்ட நல வாரிய பயனாளிகளுக்கு நிதிப்பயன்கள் வழங்கப்பட்டன. இந்த நிதிப்பயன்கள் வழங்கும் நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலர் சி. முத்துகுமாரசாமி, இ.ஆ.ப. மற்றும் மீன்வளத்துறை ஆணையர் சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப. மற்றும் மீன்வளத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

<u>விபத்து நிவாரணம் பயன் பெற்றவர்கள்</u>

1. திரு. அன்பு, கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம் ரூ. 1,00,000/–
2. திருமதி. ரீட்டா, கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம் ரூ. 1,00,000/–
3. திருமதி சுந்தரி, செம்மஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம் ரூ.1,00,000/–

<u>கல்வி நிதிப்பயன் பெற்றவர்கள்</u>

1. திரு. பூமிநாதன், பெரிய நீலாங்கரை, காஞ்சிபுரம் மாவட்டம் ரூ.2,000/–
2. திருமதி சிவகாமி, புது கல்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் ரூ. 2,000/–

ஜி. சந்திரசேகரன்
மீன்துறை உதவி இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9